DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.180/2021**

Prosecution **PW.3**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | தினேஷ் | கிராமம் : | |
| தந்தை பெயர் : | குணசேகரன் | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 32 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.07.2026

1, 2 எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம் கட்டளையில் குடியிருந்து கிட்டாச்சி ஆப்ரேட்டராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது அல்ல. நான் போலிசாரிடம் எப்போதும், எங்கும் கையெழுத்து செய்யவில்லை. இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார்எ ன்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அனுமதி பெறப்பட்டு பிறழ்சாட்சியாக விளம்புகை செய்யப்படுகிறார்.**

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

02.10.2017 ம் தேதி காலை 08.30 மணிக்கு நத்தமேடு துவக்கப்பள்ளி அருகே நானும் எனது நண்பர் ஹேமந்த் என்பவரும் சென்ற கொண்டிருந்த போது போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் வரைந்தார்களா என்றல் இல்லை. அதில் நானும் எனது நண்பர்ஹேமந்த் என்பவரும் கையொப்பம் செய்தேன் என்றால் இல்லை. தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் என்

ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1, 2 எதிரிகள் என் ஊரைச்சேர்ந்தவர்கள் அல்ல, உறவினர்கள் அல்ல என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/—திரு.ஆர்.பாக்கியராஜ்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.